# அரசைக் கலந்த பின்பே இனப்பிரச்னைக்கான தீர்வுத் திட்டத்தை சுதந். கட்சி முன்வைக்கும்!

நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 29 இதழ் 277
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 14 — 11 — 1992

(கொழும்பு) அரசைக் கலந்த பின்பே இனப்பிரச்னை தீர்வுக்கான திட்டத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முன்வைக்குமென கட்சி எம். பி. திரு. மகிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார். இந்த அரசு ஆட்சியில் இருக்கும் வரை இனப்பிரச்னைக்கு (4-ம் பக்க பார்க்க)

## தெற்கில் அச்சகத்துக்கு பொலிஸ் சீல் வைப்பு

(கொழும்பு) 'அரசுக்கு எதிராக மக்கள் ஆயுதங்களை ஏந்த வேண்டும்' என்ற துண்டுப் பிரசுரங்களை அச்சிட்ட அச்சகமொன்று தெற்கில் பொலிசாரால் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது. இந்த அச்சகத்திலிருந்து ஒருவர் கைது செய்யப்பட்டுள் (4ம் பக்கம் பார்க்க)

## கிளாலி - ஆலங்கேணியில் பயணிகள் அவதி

(யாழ்ப்பாணம்) நேற்றுமுன் தினமிரவு முதல் கிளாலிப்படகுச் சேவை ஸ்தம்பிதமடைந்ததைத் தொடர்ந்து பெருந்தொகையான பய (4-ம் பக்கம் பார்க்க)

# யுத்தமுறையைஎதிர்த்துநேற்று சிறிமா தலைமையில்போராட்டம்!

## 60 மைல நீள 'மனித சங்கிலித் தொடர் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!!

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அரசு நடத்திவரும் யுத்தமுறைகளை எதிர்த்து எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் நேற்று கொழும்பில் மனித சங்கிலிப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

அத்துடன்நாட்டில் தற்போது அமுலில்உள்ள அவசரகாலசட்டத்தை நீக்குமாறும், அரசு நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படுவதை எதிர்த்தும் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

கொழும்பிலிருந்து இரத்தினபுரி வரை சுமார் 60 மைல் நீளத்துக்கு இந்த மனித சங்கிலித் தொடர் அமைக்கப்பட்டது.

அரசுக்கு எதிரான மகஜர் இந்த மனித சங்கிலித் தொடர் மூலம் கொழும்பிலிருந்து இரத்தினபுரி வரை (4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மலையகம் பாதிப்பு

(கொழும்பு)

கொழும்பு மலையகம்பகுதியிலும் கடும் மழை பெய்து வருகிறது. இரத்தினபுரி, களுத்துறை போன்ற பகுதிகளி (4ம் பக்கம் பார்க்க)

## சூறாவளிக்கு 14 பேர் பலி 300 காயம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் நேற்று வீசிய புயலினாலும் கடும் மழையினாலும் 14 பேர் பலியாகியுள்ளதாகவும் 300 பேர் வரையில் காயமடைந்துள்ளதாகவும், 2,500இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக 4-ம் பக்கம் பார்க்க)

## "நாட்டின் எல்லை எம்மை நோக்கி வரத்தொடங்கி விட்டது" அரச எம். பி.

(கொழும்பு)

எமது நாட்டின் எல்லை தற்போது எம்மைநோக்கி வரத்தொடங்கியுள்ளதாக ஐ. தே. க. எம். பி. டாக்டர் பி. எம். பி. சிறில் நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: தமிழகத்திலிருந்துஇரண்டாயிரம் பேர் வந்து புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றுள்ளனர் இவர்கள் இங்கு இராணுவத்திற்கு எதிராக போராடவுள்ளனர்.

எமது நாட்டு எல்லை எம்மை நோக்கிவரமுன் அதனை தடுக்க (4ம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் அகதி முகாமில் வெள்ளம் புகுந்தது

(மானிப்பாய்)

மானிப்பாயிலுள்ள அகதி முகாமுக்குள் நேற்று திடீரென வெள்ளம் புகுந்ததினால் அங்கிருந்த பல குடும்பங்கள் உடனடியாக ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன. (4ம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்தும் கடும் மழை வெள்ள அபாயம் ஏற்படலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக காற்றுடன் தொடர்ந்து பெய்துவரும் பெரும் மழையினால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம்புகும் அபாயம் ஏற் (4-ம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் கடல் கொந்தளிப்பாக இருக்கும்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தை தாக்கிய சூறாவளி புத்தளம் பகுதியிலிருந்து சுமார் 150 கிலோ மீற்றர் தொலைவுக்கு (4ம் பக்கம் பார்க்க)

## அடுத்தவாரம் முதல் தீவகம் கொழும்பு கப்பல் சேவை ஆரம்பம்

(கொழும்பு)

தீவுப்பகுதியிலிருந்து கொழும்புக்கு கப்பல்சேவை ஒன்று அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார். (4-ம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் நிறுத்தப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவிலிருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு இனிமேல் உலர்உணவு நிவாரணம் வழங்கப்படமாட்டாது என்று புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நெடுந்தீவிலிருந்து இடம் பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள 80க்கும் அதி (4-ம் பக்கம் பார்க்க)

## 16 கடைகளை உடைத்துத் திருடியவர் கைது!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 16 கடைகளை உடைத்து திருடிய ஒருவர் தமிழீழ காவல்துறையினரிடம் வசமாக மாட்டிக்கொண்டார்.

யாழ் நகரில் அண்மையில் இரவு நேரங்களில் நடைபெற்ற பல கடை உடைப்பு திருட்டுக்களை இவர் தனது நண்பர் ஒருவருடன் சேர்ந்து மிக சாதுரியமாக மேற்கொண்டு வந்துள்ளார். கைது (4-ம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா - அநுரா கோஷ்டிகள் மோதல்

(கொழும்பு)

கடந்த போயாதினத்தன்று திருமதி சந்திரிகாவின் கோஷ்டியும் திரு. அநுரா பண்டாரநாயக்காவின் (4-ம் பக்கம் பார்க்க)

குளம்பல வெட்டி வளம் பெறவே
நிலம் தனில் மழைநீர் தேக்கிடுவாய்

## வரி விளம்பரம்

### வைத்திய நிலையம்

வேலணையூர் நடனமுருகன் வைத்தியநிலையம் தற்பொழுது சத்திரச் சந்தி கொட்டடி றோட், யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்றது டாக்டர் கந்தையா நவரத்தினம். (சி-6958

### O/L மாணவருக்கு

O/L சமூகக்கல்வி/வரலாறு பரீட்சை வழிகாட்டி ஒரு சொல்/ஒரு வசனத்தில் விடை ஆக்கம் நா. மயில்வாகனம் சுப்பிரமணியம் புத்தகசாலையில் பெறலாம். (சி- 6973)

### விற்பனைக்கு

வியாபாரிகள் தங்கள் வியாபார ஸ்தாபனத்தை விளம்பரம் செய்வதற்கு தேவையான கலண்டர்கள் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் தகுந்த கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம். அச்சுப்பதிவு செய்யப்படாத கலண்டர்கள், சிலிப்புகள் விற்பனைக்குண்டு. ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். [எ-2588]

## சீனி விநியோகம்

(பருத்தித்துறை)

புலோலி ப. நோ. கூ. சங்கம் பாவனையாளர்களுக்கு கட்டுப்பாடானமுறையில் செயலகத்தால் அறிவிக்கப்பட்ட விலைக்கு இரண்டாம்கட்டமாக சீனி விநியோகத்தை மேற்கொண்டுவருகின்றது (52)

## நவ. 27க்கு முன் நத்தார் வாழ்த்தை அனுப்பவேண்டும்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி மக்களை நத்தார் வாழ்த்து தபால்களை நவம்பர் 27ம் திகதிக்கு முன்னர் தபாலில் சேர்க்குமாறு வடகிழக்கு மாகாண தபால் அத்தியட்சகர் திரு. எஸ். எம். சேதுகாவலர் தெரிவித்துள்ளார். (159)

## இராசி பலன்

**14-11-1992**

சனிக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 29

சதுர்த்தி பி.ப 12.33 வரை. திருவாதிரை மாலை 7.04 வரை சித்தயோகம். இராகுகாலம் காலை 9 07முதல் 10.37 வரை சுபநேரம், மாலை 3.07 முதல் 4-37 வரை.

மேடம்;- சுக விருத்தி. காரிய அனுகூலம், பொதுஜன நன்மை.

இடபம்:- புதிய பிரச்னை, வீண்விரயம், தொழில் நஷ்டம்

மிதுனம்:- தொழில் மாற்றம், சகோதர உதவி, சுபகாரியம்.

கடகம்:- நோய் பாதிப்பு, மனக்கவலை, உற்சாகமின்மை

சிங்கம்:-பரோபகாரசிந்தை, தனவரவு, நிம்மதி

கன்னி:- கேள்விஞானம், சேவை அனுகூலம், பணவரவு

துலாம்:- மற்றவர் பழிப்பு, மனப்பீதி, அகாலபோஜனம்

விருச்சிகம்:- வருவாய்கலகம், கெட்டபெயர், பணமுடை

தனுசு;- எதிர்பாராத உதவி குடும்பசுகம், முரண்பாடுநீங்கும்

மகரம்:-மேலதிகாரிகள் நல்லெண்ணம், அதிகாரிகளுக்கு பணிதல். காரியசித்தி.

கும்பம்:- பயணத்தடை மனச்சங்கடம், இடம்பெயர்வு

மீனம்:- குடும்பமுரண்பாடு, பாசப்பிரிவினை வெறுப்பு

— ஜோஸ்யர்

## அங்கவீனர்களுக்கு புனர்வாழ்வளிக்க திட்டம்

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்தில் அங்கவீனர்களாயிருப்பவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான நடவடிக்கையில் யாழ். சமூக சேவைத் திணைக்களம் முயற்சி எடுத்து வருகின்றது.

இது சம்பந்தமாக கடந்த 7ம் திகதி யாழ். சர்வோதய நிலையத்தில் முன்னோடிப்பாடசாலை ஆசிரியைகளுக்கும் சர்வோதய தொண்டர்களுக்குமிடையே நடைபெற்ற மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட யாழ். சிரேஷ்ட சமூகசேவை உத்தியோகத்தர் திரு. க. இராமநாதன் அங்கவீனர்களின் புனர்வாழ்வும் சமூகப்பணியும் என்னும் விடயம பற்றி விரிவுரையாற்றும் போதுஇதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வைபவத்தில் பாலர் முன்னோடிப் பாடசாலையை மையமாகக்கொண்டு ஆசிரியர்களும் தொண்டர்களும் சமூகப்பணி செய்வதற்கான விளக்கொத்தொன்றும் வழங்கப்பட்டது.

அங்கவீனர்களும் புனர்வாழ்வையும் உள்ளடக்கியதாய் அமைந்துள்ள இவ்விளக்கொத்துகள் அடுத்துவரும் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் பரிசீலனைக்கு எடுததுக்கொள்ளப்பட்ட பின்னர் புனர்வாழ்வுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (71)

## குடும்ப அட்டை மீளாய்வு

(மானிப்பாய்)

மானிப்பாய் வடககு கிராம சேவையாளர் பிரிவில் குடும்ப பதிவு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன (71)

## மாதமுடிவில் 'குமண' வரும்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சென்றுள்ள குமணகப்பல் இம்மாத இறுதிவாரத்தில் பருத்தித்துறை வந்து சேரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கப்பலில் எடுத்துவரப்படும்அத்தியாவசியப்பொருட்களுடன் பிரதம தபாற்கந்தோருக்குதேவையான முத்திரைகள் ஏரோகிறாம் ஆகியனவும் எடுத்துவரப்படுகிறது.

தபாற் பொதிகளும் எடுத்து வருமெனவும் தெரியவருகிறது. (56)

**அடையாள அட்டைப் படம்**

தேசிய அடையாள அட்டைப்படம் பிடிக்க ரூபா 40/-. விரைவாக வழங்கப்படும்

**குகன் ஸ்ருடியோ**

**பருத்தித்துறை**

(எ 2580)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி கிருஷ்ணர் நாகபூஷணி**

மலர்வு: 1920-03-18 உதிர்வு: 1990-11-06

**திதி- 1992-11-14**

திதி வெண்பா

"செல்லாநின் தொண்ணூறு கார்த்திகைத் திங்களின்
வல்ல தினமாகும் செவ்வாயில் நல்லவள்
அம்மை நாகபூஷணி அம்மையப்பன் பாதமலர்
நம்பியே சேர்ந்தனள் நாடி."

ஈராண்டு சென்றாலும் எம் இதயத்தை விட்டு அகலாதிருக்கும் எம் அன்புத் தெய்வத்தின் ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்:

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிமார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

"நாகபூஷணி இல்லம்",
(வீரபத்திரர் கோவிலடி),
வட்டுக்-கிழக்கு,
சித்தன்கேணி. (எ 2587)

## பரீட்சார்த்திகளை கொழும்புவருமாறு பணிப்பு

(திருநெல்வேலி)

எதிர்வரும் 16-ந் திகதி நடைபெறவுள்ள டிப்புளோமா பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை கொழும்பில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கொழும்பிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது

இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள வடபகுதிப் பரீட்சார்த்திகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இப்பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பித்த பரீசார்த்திகள் கொழும்பு செல்வது குறித்து முடிவெடுக்க முடியாத ஒரு நிலையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. (157)

## டாக்டர் பிலிப் ஞாபகார்த்த சபை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

அமரர் டாக்டர் ஜே. பி. ஸி பிலிப் ஞாபகார்த்த சபை ஒன்று அண்மையில் யாழ் நகரில் அங்குரார்ப்பணம்செய்து வைககப்பட்டது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண பேர்ணட். யாழ் உதைபந்தாட்ட லீக் தலைவர் திரு. எஸ் ரி. கணநாதன். ஒ எல். ஆர். பாடசாலை அதிபர் எஸ். தாஸிஸியஸ் ஆகிய மூவரின் தலைமையில் 19 பேர் அடங்கிய குழு ஒன்று அண்மையில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்க மண்டபத்தில் கூடிய கூட்டமொன்றில் தெரிவுசெய்யப்பட்டது.

விளையாட்டு, கல்வி, சமயம், கலை, சமூகம் ஆகிய துறைகளை விருத்தி செய்வதுடன் இத்துறைகளில் சிறந்துவிளங்குவோருக்கு புலமைப்பரிசில்களையும் அமரர் டாக்டர் பிலிப் ஞாபகார்த்தமாகவழங்குவதற்கும் மேற்படி சபை திட்டம் தீட்டியுள்ளது.

புனிதவளன் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட இக்குழுவின் முதலாவது அங்குரார்ப்பணக் கூட்டத்தில், உதைபந்தாட்ட விளையாட்டுக்குச் சிறந்த சேவையாற்றித் திடீரெனக் கடந்த வாரம் காலமான அமரர் ரி.பி பத்மநாதனுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வி)

## 1,500 மீனவர் குடும்பம் நிவாரணமின்றி பாதிப்பு

[சித்தன்கேணி]

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சுமார் 1500 மீனவக் குடும்பங்கள் ஆகஸ்ட் மாதத்தில் இருந்து நிவாரணம் வழங்கப்படாமையினால் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட 25 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுமுள்ள சுமார் 1500 பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு ஆகஸ்ட் மாதத்தில் இருந்து இதுவரை நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை. இதனால் இந்த பாதிக்கப்பட்ட 1500 மீனவர் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 6000 பேரும் பட்டினிச்சாவை எதிர் நோக்கியுள்ளனர்.

இவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட மீன்பிடித் தொழிலாளர்களின் சங்கங்கள் உதவி அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (137)


## 3000 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது

(சித்தன்கேணி)

இராணுவத்தினரின் பூகம்பம் நடவடிக்கைகளினால் பாதிப்படைந்த சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சுமார் 3000 குடும்பங்களுக்கு மூன்றும் கட்ட இலவச உலர் உணவு வழங்கப்படுகின்றது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இராணுவத்தினரின் பூகம்பம் நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட அராலி மேற்கு கி. உ. பிரிவைச் சேர்ந்த சுமார் 310 குடும்பங்களுக்கும், அராலி தெற்கு கி. உ. பிரிவைச் சேர்ந்த சுமார் 500 குடும்பங்களுக்கும், அராலி கிழக்கு கி. உ. பிரிவைச் சேர்ந்த சுமார் 200 குடும்பங்களுக்கும், சுழிபுரம் கிழக்கு கி. உ. பிரிவைச் சேர்ந்த சுமார் 225 குடும்பங்களுக்கும், சுழிபுரம் மேற்கு கி. உ. பிரிவைச் சேர்ந்த சுமார் 300 குடும்பங்களுக்கும், சுழிபுரம் மத்தி கி. இ. பிரிவைச் சேர்ந்த சுமார் 125 குடும்பங்களுக்கும் பணிப்புலம் கி. உ. பிரிவைச் சேர்ந்த சுமார் 600 குடும்பங்களுக்கும், மூளாய் கி. உ. பிரிவைச் சேர்ந்த சுமார் 70 குடும்பங்களுக்கும், பொன்னாலை கி. உ. பிரிவைச் சேர்ந்த சுமார் 100 குடும்பங்களுக்கும் பண்ணாகம் கி. உ. பிரிவைச் சேர்ந்த சுமார் 50 குடும்பங்களுக்கும் எல்லாமாக சுமார் 3,000 குடும்பங்களுக்கும் மூன்றும் கட்ட இலவச உலர் உணவு சங்கானை உதவி அரசாங்க அதிபர் ரூபிணி கனகரத்தினத்தின் முயற்சியினால் தற்போது சங்கானை ப. நோ. கூ. ச. கிளைகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. (137)

## முதலிடம்



[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை கத்தோலிக்க விவிலிய பேச்சுப் போட்டியில் யாழ்ப்பாணம் நாவாந்துறைப் பங்கைச் சேர்ந்தவரும், யாழ். திருக்குடும்ப கன்னியர் மட (ஆங்கிலம்) க. பொ. த. (உயர் தரம்) மாணவியுமான செல்வி மலர் இயாஸ் விக்ரரின் செவ்வதி அதிமேற்பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றார். இவருக்குரிய வெள்ளிப்பதக்கத்தை காலி மேற்றிராணி ஆயர் கலாநிதி டொன் சில்வஸ்ரர் வழங்கிக் கௌரவித்தார்.

# பொது நிறுவனங்களில் ஒழுங்கீனம் அபிவிருத்தியை பாதிக்கும்

(நேற்றைய தொடர்ச்சி)

இந்த நாட்டில் ஒழுங்கு முறைகளே அரச பணியாளர் மத்தியில் பேணுவதற்கு ஏற்கனவே தெரிவித்தவாறு நடைமுறை விதிகள், ஒழுங்குகள் இருக்கின்றன. ஆனால் அவைகள் மீறப்பட்டு வருகின்றன.

உதாரணமாகக் காரியாலயக் கடமை நேரங்கள், மதிய உணவுக்காக ஒதுக்கப்பட்ட நேரம், பிந்தி வருபவர்களுக்கான சலுகை, லீவு பெறுவதற்கான ஒழுங்குகள் பேணப்பட்டு வருவதில்லை.

எப்பொழுதும் ஒரு சில பகுதிப் பணியாளர்கள் ஒழுங்கு முறைகளைத் தங்கள் மேல் திணிப்பதை விரும்புவதில்லை. கடமை ஒழுங்கு அவர்களின் கனத்தப்பான முறையில் கைக்கொள்ளப்படுவதில்லை.

கடமைக்கு ஒழுங்காக வருபவர்களின் நிலைமை பற்றி ஆராய்ந்தால் பிந்தி வருபவர்கள் அநேகமானோர் திணைக்களங்களிற்கு மிக அண்மையில் வசிப்பவர்கள் என்ற உண்மை தெளிவாகின்றது.

தொலைவில் இருந்து வருபவர்கள் அநேகமாக நேரத்துக்குக் கடமைக்கு வருகின்றார்கள். கடமை முடிவதற்கு அரை மணித்தியாலம் முன்னதாகவே வீடு செல்வதற்காக உபகரணங்களைக் கீழே வைத்துவிடுகின்றனர். ஒரு சிலர் வீடு செல்லும் நேரத்துக்கு முன்னதாகவே அலுவலக விருந்தைகளிலும், தேநீர்ச்சாலைகளிலும், பிற இடங்களிலும் நின்று நேரத்தை அரட்டை அடிக்கின்றார்கள்.

இந்த வீணை நேரத்துக்கெல்லாம் அவர்களுக்குக் கொடுப்பனவு உண்டு. ஒரு சிலர் பிந்தி வந்து நேரடியாக தேநீர்ச்சாலைக்குச் சென்று அங்கு அரை மணித்தியாலம் அரட்டை அடிப்பதிலும், அரசியல் பேசுவதிலும் தமது நேரத்தைச் செலவழிக்கின்றார்கள். அரசாங்க கடமை நேரத்தில் தனது சொந்த வேலைகளில் ஈடுபட்டுச் சம்பளம் பெற்றுக்கொண்டும் இருக்கின்றார்கள்.

டபிள்யூ. காமினி எப்பா
(கணக்காளர் நாயகம்)

பொதுமக்களுக்கு ஒவ்வொரு விடயத்தை நிறைவேற்றுவதற்கு திணைக்களங்களுக்கு பலமுறை செல்ல வேண்டியிருக்கிறது. சம்பந்தப்பட்ட பணியாளரை காரியாலயத்தில் சந்திக்க முடியாது இருக்கின்றார்கள். அவர் சில சமயங்களில் இளைப்பாறும் அறையில் அல்லது ஒரு சிற்றுண்டிச்சாலையில் காணப்படுவார். அத்துடன் பொதுமக்கள் பலமுறை காரியாலயங்களுக்குச் சமூகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் உள்ளது என்ற தகவல்களை நாம் பத்திரிகைகளில் வாசிக்கின்றோம்.

இதனால் விரக்தியடைந்த பொதுமகன் ஒருவர் மனதில் பெரும் தாக்கம் ஏற்பட்டு மக்கள் சேவைக்காக அர்ப்பணித்து அரச ஊழியரின் கடமை அசட்டையீனத்தைப் பற்றி அவர் பிரகித்துக்கொள்கின்றார்.

மேலும் அரச ஊழியர் ஒருவர் விடுமுறை எடுப்பதல் ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுவதில்லை. விடுமுறையை விண்ணப்பித்து அங்கீகாரம் படுத்தவேண்டும் என்பது நியதி. ஆனால் ஒரு பணியாளர் லீவு விண்ணப்பம் அவர் கடமைக்கு வராத இடத்து எங்கிருந்தோ வந்து சேர்ந்து விடுகின்றது. இதனால் அதியாவசிய சேவைகள் பாதிப்புக்குள்ளாகுகின்றன.

ஒருவர் கடமைக்குச் சமுகம் கொடுக்காது விடுமுறை இடமாற்றம் சம்பந்தமான விவகாரங்களுக்கு வைத்திய சான்றிதழ் ஒன்றினை ஒரு குறிப்பிட்ட தொகையினைக் கொடுத்து பெற்றுக்கொள்கின்றார். கடமையுணர்வற்ற நிலையில் ஒருவர் மாசமுடிவில் தனது சம்பளத்தைப் பெறுவது பெரும் குற்றமாகும்.

என்னைப் பொறுத்த அளவில் பணியாளர்கள், திணைக்களங்களில் தமது நேரத்தை வீணடிக்கக் கொள்கின்றார்கள் என்றும் எமது காரியாலயத்தில் தருமச் சம்பளப் பட்டியல் இல்லையென்று தெரிவிக்கின்றேன். கடமையின் தொய்வு நிலை இந்த நாட்டிலே உள்ளதாக பொருளாதார பாதிப்பு, தயக்கம், பணவிரயம் முதலியவை ஏற்படுகின்றன, இவற்றினைத் தவிர்ப்பதில் நாட்டில் பல தொழில்சாலைகள் நிறுவனங்களுடன் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளலாம். ஆகையால் பொது நிறுவனங்கள் ஒழுங்கீனங்களை நிறுத்தி அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும், நாட்டின் சுபீட்சத்துக்கும் உழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

— நன்றி: ஐலன்ட்.

# 'ஹெல உறுமயவை' தடைசெய்ய கோரிக்கை

(கொழும்பு)

'ஹெல உறுமய'வை தடை செய்ய வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள பௌத்த குருமார் கேட்டுள்ளனர்.

பல பௌத்த குருமார்கள் கூடி முடிவெடுத்த கூட்டத்தில், சிறிமாவோ பண்டாரநாயக்கா, கே. பி. ரத்நாயக்கா, ரிச்சர்ட் பத்திரான ஆகியோர் சமுகமளித்திருந்தனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (சு)

# ஜெயலலிதா விவகாரம் சென்னை உயர் நீதிமன்ற மனு விசாரணையில்

(சென்னை)

ஜனதாகட்சித் தலைவர் திரு. சுபபிரமணியசுவாமி முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை சம்பந்தப்படுத்தி ஒரு குற்றச்சாட்டு தெரிவித்து வெளியிட்ட அறிக்கையை பிரசுரிக்கும் பத்திரிகைகள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படுமென்று தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஒருவர் தாக்கல் செய்த மனுவை நேற்று நீதிபதி பக்தவத்சலம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டார்.

இந்த மனுகுறித்து ஒருவார காலத்துக்குள் பதிலளிக்குமாறு தலைமைச் செயலாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். (சு)

# அதிரடிப்படை சார்ஜனை சிப்பாய் சுட்டுக் கொன்றார்

(கொழும்பு)

அதிரடிப் படை வீரர் ஒருவர், தனது அதிகாரியான சார்ஜன்ட் ஒருவரைச் சுட்டுக் கொன்ற சம்பவம், கிழக்கு மாகாணத்தின் அம்பாறை அதிரடிப் படை முகாமில் இடம் பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: அந்த அதிரடிப் படை வீரர் கடமைக்கு வராமல் விடுதியில் தங்கியிருந்த போது, விடுதிக்குச் சென்று விசாரித்துக்கொண்டிருந்த சார்ஜன்டையே தனது துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார் என்றும் கூறப்படுகிறது.

அண்மைக் காலமாக அந்த வீரர் விரக்தியுற்றுக் காணப்பட்டார் என்றும் கூறப்படுகின்றது. (சு)

# பலநாள் திருடனை பொலிஸார் துரத்திப் பிடித்தனர்

(கொழும்பு)

50க்கும் மேற்பட்ட திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய திருடன் ஒருவர் பொலிஸ் கொன்ஸ்டபிளினால் அண்மையில் துரத்திப் பிடிக்கப்பட்டார்.

கொழும்பு, கண்டி, அநுராதபுரம், புத்தளம் ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற பெருமளவு திருட்டுச் சம்பவங்களுக்கும், இவருக்கும் தொடர்பு இருப்பதாகவும், இவரிடம் வீடு தகர்க்கும் விசேட வெடிமருந்துக் கருவியும் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இத்திருடனை அரை மைல் தூரம் துரத்திச் சென்றே பொலிஸார் பிடித்தனர். (க)

★ உடுகம்பொலவை —

# வெளியேகொண்டுவருவதற்கு அமைச்சர் 'மட்டத்தில் முயற்சி

(கொழும்பு)

அரசாங்கத்தின் சம்மதத்துடன் முன்னாள் உதவிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொலவை வெளியில் கொண்டு வருவதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன என சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி பிரேமதாசாவோடு நெருங்கிப்பழகுபவரான அமைச்சர் சிறிசேன கூரே இந்த முயற்சியிலீடுபட்டிருக்கிறாரென்றும் இது குறித்து அமைச்சர், உடுகம்பொலவின் மனைவியோடு பேசியுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

இந்தப் பேச்சுவார்த்தையில், உடுகம்பொலவின் ஒய்வூதியம், அமெரிக்க தூதுவராலயத்தில் கடமை பார்த்து நீக்கிய உடுகம்பொலவின் மனைவியின் விவகாரம், உடுகம்பொலவுக்கு எதிராகப் போடப்பட்டிருக்கும் வழக்கு சம்பந்தமாக பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (சு)

## நால்வர் கைது

(சென்னை)

1984ம் ஆண்டு சென்னை மீனம்பாக்கம் விமானநிலையத்தில் குண்டுவைத்தது தொடர்பாக நான்குபேர் சந்தேகத்தின் பேரில் கொழும்பில் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சு)

## தொழில்நுட்ப பொருட்காட்சி

(பருத்தித்துறை)

புற்றளை மகாவித்தியாலய ஆசிரியர்கள் மாணவர்கள் இணைந்து ஒழுங்குசெய்துள்ள தொழில்நுட்ப அழகியல் பொருட்காட்சி இம்மாதம் 18ம் திகதி புதன்கிழமை வித்தியாலயத்தில் நடைபெறும். (52)

## வாகன விபத்து 12 பேர் பலி

(சென்னை)

தமிழ் நாட்டில் நேற்று இடம் பெற்ற இரு விபத்துச் சம்பவங்களில் குறைந்தது 12 பேர் மரணமுற்றனர் என்றும் 50 பேருக்கு மேல் காயமடைந்தனர். என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சேலம் அருகே சிரகாபாட்டியில் தனியார் பஸ் கவிழ்ந்ததால் 6 பேர் மரணமாகினர். என்றும் 50 பேர் காயமடைந்தனரென்றும் மயிலமருகே இரண்டு லொறிகள் மோதியதில் ஓட்டுனர்கள் உட்பட 6 பேர் மரணமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சு)

★ மாவீரர்கள் —

# தேசத்தின் தேவைக்காக தம் தேகங்களை உரமாக்கியவர்கள்

(யாழ்ப்பாணம்)

தாம் வாழும் மண்ணின் விடுதலைக்காகவும், தமது சந்ததி எதிர்காலத்திலேனும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கவேண்டும் என்பதற்காகவும், தம்மையே தீயிட்டுக் கொண்டவர்கள் தாம் இந்த மாவீரர்கள். இவர்கள், அன்னியன் காலடி எம் மண்ணில் பதியக்கூடாது என்பதற்காக எல்லைகளில் வேலியாகி நின்றவர்கள். கண்ணை இமை காப்பது போல், கண் துயிலாது காவல் நின்றவர்கள். மலை போலப் பகைவன் படை வந்தெதிர்த்த வேளைகளிலும் நிலைகுலையாது நின்றெதிர் கொண்டவர்கள்.

எதிரிகளை இம்மணிலிருந்து அகற்றுவது மட்டுமல்ல இவர்களின் பணி. எதிரியிடமிருந்து மீட்கப்பட்ட மண்ணனது, சாதி-மத பேதங்களற்ற சமதர்ம பூமியாகத் திகழவேண்டும் என்பதுவும் இவர்கள் கண்ட கனவாகும்.

சொந்த பந்தங்களையும், சுயநல எண்ணங்களையும் அறுத்தெறிந்துவிட்டு, தேசநலன் ஒன்றே இலக்கெனக் கொண்டு, ஆயுதங்களைக் கையில் ஏந்தியவர்கள் இவர்கள். தேசத்தின் தேவைக்காக இறுதியில் தம் தேகங்களையே உரமாக்கியவர்கள். "தமிழருக்கு உயிரை விட மானமே பெரிது. அடிமை வாழ்வு அவமானமானது. குருதி சிந்தியேனும் விடுதலை பெறுவோம்" என்றெல்லாம் மேடைகளில் முழங்கிக் கொண்டு, செயல்படமுடியாமல் முடங்கிக் கிடக்கும் வாய்ச்சொல் வீரர்களல்ல, இந்த மாவீரர்கள். தேச விடியலுக்காகக் குருதி சிந்தி, அதனைச் செயல்வடிவாக்கிய தீரர்கள், தியாகிகள் இவர்கள்!

## மாவீரர் வார ஏற்பாடுகள்

### அலங்கார வளைவுகள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ்க்குடா எங்கும் மக்களால் இதற்கான ஆயத்த வேலைகள் யாவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி, வடமராட்சி வலிகாமம் பகுதிகளில் மாவீரர் தினத்தை சிறப்பாக நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் யாவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாவீரர்கள், போராட்ட நிகழ்வுகளை சித்தரிக்கும் அலங்கார வளைவுகள், சிகரங்கள் போன்ற முக்கிய சந்திகளிலும் வீதிகளிலும் கட்டப்பட்டு வருகின்றன. (56)

### கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மாவீரர் தினம் சிறப்பாக அனுஷ்டிக்க ஏற்பாடுகள் நடைபெறுகிறது. இது தொடர்பான கூட்டம் ஒன்று கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றபோது வன்னி அரசியல் பொறுப்பாளர் திரு. மனோ, கிளிநொச்சி அரசியல் பொறுப்பாளர் திரு. இலக்கியன், வர்த்தகர் சங்கத் தலைவர். திரு. சரவணபவானந்தன் ஆகியோர் உரையாற்றினார்கள். (83)

### அலங்கார பந்தல்கள்

(சாவகச்சேரி)

மாவீரர் தினத்தையொட்டி சாவகச்சேரியில் அலங்காரப் பந்தல்கள் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரி கோட்டடியில் பிரதான வீதிக்கு முன்பாகவும் சங்கத்தானையிலும் பிரமாண்டமான இரண்டு அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (155)

## இன்று

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வாரிவளவு நலியக்கச் சபை, காரைநகர் மாணவர்களிடையே நடாத்தும் க. பொ. த. (சா/த) கணித/விஞ்ஞான முன்னோடிப் பரீட்சை இன்று பிற்பகலும், நாளை காலையும் நடைபெறும்.

0 0 0 0

(உடுவில்)

மருதனார்மடம் கோட்டக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலைகளில் வர்த்தகமும் கணக்கியலும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப்பயிற்சிவகுப்புக்கள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிறும் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். ஆண்டு 8, 10, 11ல் கல்வி கற்பிக்கும் சகல வர்த்தக பாட ஆசிரியர்களும் இதில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது

### சட்டம் ஒழுங்கு சீர்குலைவதால்
# தமிழக அரசு நடவடிக்கையை
# மத்திய அரசு அவதானிக்கிறது

(சென்னை)

தமிழ்நாட்டு அரசின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் மத்திய அரசு மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாக மனித மேம்பாட்டு இணை அமைச்சர் திரு. அருணுசலம் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்குகள் சீர்குலைந்து வருகின்றது. சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கவேண்டிய பொலீஸாரே அங்கு பல சட்டவிரோத செயல்களைச் செய்துவருவது இதற்கு சான்ருகும். என்று பிரதி அமைச்சர் திரு. அருணுசலம் தமிழ்நாட்டுஅரசை மிகவும்வன்மையாகக் கண்டித்துள்ளார். (வி)

## ச. செஞ்சிலுவைச் சங்கம்
## திங்கள் வலிகாமம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் நாளை மறுதினம் திங்கட்கிழமை வலி வடக்குப் பகுதிக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இவர்கள் தமது விஜயத்தின்போது இராணுவத்தினரிடம் சிக்கியுள்ள வலிகாமம் வடக்குப்பகுதி மக்களையும் சந்திக்கவுள்ளனர்.

வலி வடக்கில் இராணுவத்தினரிடம் சிக்கியுள்ள பொதுமக்களுக்கு தபால்களை அனுப்ப விரும்புவோர் திங்கள் கிழமை காலை 8 மணிக்கு முன்னதாக பிரதம தபால் அலுவலகத்தில் நேரடியாக கையளிக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண தபால் திணைக்கள செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார் (159)

### சந்திரிகா
(1ம் பக்கத் தொடர்ச்சி)

கோஷ்டியும் நேரடியாக மோதலில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

திருமதி பண்டாரநாயக்காவின் ஹொராகொல வளவில் இம்மோதல் இடம் பெற்றதாகவும் செய்திகள் தொவிக்கின்றன.

தம்மைத் தாக்க வந்த சந்திரிகாவின் கோஷ்டியை அநுரா கோஷ்டி விரட்டியடித்ததாகவும் கூறப்படுகிறது. (சி)

### நாட்டின்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் துரித ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும். இதற்காக அனைவரும் அரசுடன் ஒத்துழைக்கவேண்டும் என்ருர். (சி)

### நெடுந்தீவிலிருந்து
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கமான குடும்பங்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுவந்த உலர் உணவு நிவாரணம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது

இப்பகுதி மக்கள் நேற்று யாழ். செயலகத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம தமது நிவாரணத்தை தொடர்ந்து வழங்குமபடி கேட்டபோது நெடுந்தீவுப்பகுதி மக்களின் நிவாரணங்களை அரசு நிறுத்திவிட்டதனுல் நாம் தொடர்ந்து உங்களுக்கு நிவாரணம் வழங்க முடியாது எனக் கைவிரித்து விட்டதாக இவர்கள் மிக மனவேதனையுடன் தெரிவித்தனர். (வி)

### அரசைக் கலைத்த
(1ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வுகாணப் போவதில்லை. இதனை சகல மக்களும் உணரவேண்டும் எனவும் கூறிஞர்

இதேவேளை இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட தெரிவுக்குழு முன் ஆளும் ஐ. தே. கவும் சுதந்திரக்கட்சியும் எதுவித யோசனையும் முன்வைக்காததும் தெரிந்ததே. (சி)

### தெற்கில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வார். இரகசிய தகவலொன்றின் பேரிலேயே இந்த அச்சகம் முற்றுகையிடப்பட்டதாம்.

இதேவேளை தெற்கின் பல பகுதிகளிலும் அரசுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன். (சி)

### கொழும்பு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளத்திஞல் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் களுத்துறையில் மட்டும் 1 000க்கும் மேற்பட்ட வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சில இடங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதனுல் ரயில் சேவை பாதிப்படைந்துள்ளதாகவும்கூறப்படுகிறது.

### சூருவளிக்கு
(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வும் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை, பொத்துவில், அக்கரைப்பற்று, கல்முனை, ஆகிய பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 236 தொழிற்சாலைகள் சேதமடைந்துள்ளதாகவும் மேலும் இப்பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற 3மீன்பிடி வள்ளங்களை காணவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் ஏற்பட்ட கடும் வெள்ளத்திஞல் 4, 000 ஏக்கர் நெல்வயல்கள் சேதமடைந்துள்ளதாவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

### அடுத்தவாரம்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கப்பல் சேவைக்கான கட்டணம் 100 ரூபா எனவும் தீவுப்பகுதியிலிருந்து கப்பல் திருமலை வரை செல்லுமென வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'நாகபூமா' என்ற கப்பலே இச் சேவையில் ஈடுபடுமென வும் அவர் தெரிவித்தார். (சி)

### 16 கடைகளை
(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட இவரிடமிருந்து சகல விபரங்களையும், தெரிந்து கொண்ட காவல்துறையினர் இவரின் திருட்டுகளுக்கு உதவியாக இருந்த மற்ற ஒருவரைத் தேடி வருவதுடன், இவர் திருடிய பொருட்களை வாங்கிய பலரையும் கைது செய்துள்ளனர்.

இவர் யாழ். நகரில் 6 கடைகளையும், இணுவில், உடுவில், சுன்ஞகம் ஆகிய பகுதிகளில் உள்ள 10 கடைகளையும் உடைத்து திருடியுள்ளதாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (வி)

### வயிற்ருேட்ட நோய்:
## மற்ருெரு குழந்தை பலி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதஞ வைத்திய சாலையில் தினமும் குழந்தைகள் வயிற்ருேட்ட நோய்க்குப பலியாகி வருகின்றனர்

நேற்று முன்தினம் இரவும் குருநகரைச் சேர்ந்த யூ. ஜெனிங்ரன் என்ற ஆறு வயதுக் குழந்தை இந்நோய்க்குப்பலியானது. (159)

### காங்கேசன்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நகர்ந்து சென்றுள்ளதாகவும் இதஞல் காங்கேசன் துறையிலிருந்து காலிவரையான கடல் கொந்தளிப்பாக இருக்குமென்றும் இதஞல் வடக்கு வடமேற்கு மாகாணங்களில் மழை பெய்யும் என்றும் இடையிடையே காற்றுவீசுமென்றும் வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (க)

### கிளாலி
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணிகள் கிளாலியிலும் ஆலங்கேணியிலும் தரித்து நிற்கின்றனர்.

இவர்கள் கடும் மழைக்குள் தங்குமிட வசதிகள் இன்றி பெரும் சிரமப்படுவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (159)

### யுத்த முறையை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைக்குக்கை மாற்றம் செய்யப்பட்டது.

அரசுக்கு எதிரான மனித சங்கிலிப் போராட்டத்தை எதிர்க்கட்சி தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நேற்று கொழும்பில் ஆரம்பித்து வைத்தார். சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் ஆயிரக்கணக்கான மக்கள் இதில் கலந்துகொண்டனர்.

இப்போராட்டத்தில் ஆண், பெண், குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்காஞேர் பங்குபற்றியுள்ளதுடன் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டுள்ளனர். இந்தப் போராட்டம் மூன்று நாட்கள் நடைபெறும். (வி)

### மானிப்பாய்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்துவரும் மழையினுல் வெள்ளம் ஒடமுடியாது மானிப்பாய் அதிகார் செல்லமுத்து வீதியிலுள்ள அகதி முகாமுக்குள் புகுந்துள்ளது இதனுல் வலி மேற்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து இம்முகாமில் தங்கியிருந்த சுமார் 50க்கு மேற்பட்ட குடும்பங்கள் உடனடியாக ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளன. (71)

# புனித யுத்தத்துக்கு
## முஸ்லிம்கள் விருப்பம் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக புனித யுத்தம் ஒன்றை நடத்துவதற்கு முஸ்லிம் மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாக வெரித்தாஸ் நேற்று தெரிவித்தது.

'அல் இஸ்லாம்' என்ற பத்திரிகை நடத்திய ஆய்வு ஒன்றிலேயே முஸ்லிம்மக்கள் இவ்விதம் விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## 8 மீன்பிடி படகுகளைக் காணவில்லை

(கொழும்பு)

திருமலை, அம்பாறை பகுதியில் வீசிய கடும் சூருவளியிஞல் மொத்தம் 8 மீன்பிடி வள்ளக்கள் கடலில் காணுமல் போனதுடன் இப்படகுகளில் சென்ற மீனவர்களின் நிலையும் தெரியவில்லை என்று கூறப்படுகின்றது.

அம்பாறையில் 3படகுகளும் திருமலையில் 5 இழுவைப் படகுகளும் காணுமல்போயுள்ளன இதே நேரம் 30 லட்சம் ரூபாய் பெறுமதியான படகொன்று சூருவளியிஞல் அடிபட்டு ஹெறதலை பகுதியில் கரைசேர்ந்துள்ளது.

இதிலிருந்த 13 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர். (வி)

### வழக்குத் தாக்கல் செய்வதில்
## ஜெயலலிதா சாதனை

(சென்னை)

நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல்செய்வதில் தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இந்தியாவிலேயே சாதனை படைத்துள்ளார் என்று கூறப்படுகின்றது. சென்னை விசேட உயர்நீதிமன்றத்தில் கடந்த 15 நாட்களில் 600 அவதூறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதில் தமிழ்நாடு அரசு 32 வழக்குகளை தாக்கல் செய்துள்ளதுடன், முதலமைச்சர் ஜெயலலிதா மட்டும் 27வழக்குகளை இதுவரை தாக்கல் செய்து சாதனை படைத்துள்ளாராம்

கட்சித்தலைவர்கள், பத்திரிகைகள் தம்மை அவதூறு கூறியதாக குற்றம் சாட்டி முதலமைச்சர் ஜெயலலிதா கூடுதலான வழக்குகளை தாக்கல் செய்துள்ளாராம். (வி)

### 1990 ஜூன் முதல் டிசம்பர்வரை
## ஆசிரியர்களுக்குஊக்குவிப்பு பணம் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

1990 ஜூன் தொடக்கம் டிசம்பர் வரைக்கான ஊக்குவிப்புப் பணத்தை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்ஞர், வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இல்லாத பகுதிப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாவட்ட, கோட்ட திணைக்கள ஊழியர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் அமைச்சின் செயலாளரைப் பணித்துள்ளார் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் த மகாசிவம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்கு மாகாணத்திற்குள் இடம்பெயர்ந்து தற்காலிக இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களுக்கும் கஷ்டப்பிரதேச கொடுப்பனவு, ஆபத்துக்கால ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கவும பணிப்பு வழங்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளை கஷ்டப்பிரதேசப் பாடசாலைகள், மிகக் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகள் என வகைப்படுத்தும் முறையை மீளாய்வு செய்து அதற்கான விசேட கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கும் படி மாகாண அமைச்சின் செயலாளரை ஆளுநர் பணித்துள்ளார்.

மாகாண அமைச்சு, மாவட்டம், கோட்ட மட்டங்களில் ஆசிரிய தொழிற்சங்கப் பிரதிநிதிகளைக்கொண்ட இடமாற்றச் சபை மூலமே அதிபர், ஆசிரியர்களின் இடமாற்றங்கள் செய்யப்படஉள்ளன.

### தொடர்ந்தும்
(1-ம் பக்கத்தொடர்ச்சி)

படடுள்ளது.

குடாநாட்டின் சில பகுதிகளில் வெள்ளம் புகுந்துள்ளதிஞல் அங்கிருந்த பல குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன இதேநேரம், யாழ் நகரின் மத்தியில் உள்ள பல குளங்களின் நீர்மட்டம் உயர்ந்து வருவதஞல் அதன் அருகாமையிலுள்ள குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளன.

இக்குளங்களில் தேங்கி நிற்கும் வெள்ளநீரை கடலுக்கு அனுப்புவதற்காக யாழ் மாநகர சபை ஊழியர்கள் பெய்யும் மழையையும் பொருட்படுத்தாமல் வடிகால்களைத் துப்புரவுசெய்து வருகிருர்கள்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இரவும், நேற்றும் 25 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியதுடன் 150.1 மீற்றர் மழை பெய்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் வீசிய கடும் காற்றிஞல் பல இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளதுடன் பல வீடுகளின் கூரைகள் காற்றிஞல் அடித்துச் செல்லப்பட்டுமுள்ளன. (வி-56)

### தபால்களை அனுப்ப முயற்சி

(யாழ்ப்பாணம்)

குமாரி கப்பலில் தபால் பொதிகளை அனுப்புவதற்கு அனைத்து முயற்சிகளையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர், மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது (159)

### இடமாற்றம் ரத்து

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவம் யாழ் சன்மார்க்க மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதை உடன் ரத்துச் செய்யும்படி வடக்கு-கிழக்கு மாகாணசபையின் கலாச்சார, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் யாழ். கல்வித் திணைக்களத்தைப் பணித்துள்ளார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registerrd as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10336/8